# அறிவு, நட்பு, நிலையாமை குறித்த அருணகிரிநாதரின் அரிய செய்திகள்

# Arunagirinathar's Rare Messages on Wisdom, Friendship, and Impermanence

இராமலிங்கம் அய்யாக்கண்ணு / Ramalingam Iyakanoo[1]

**Abstract**

Social norms are values that distinguish humans from the other living things. Briefly, social norms refer to positive values practiced in a society. Man needs to understand such social norms as man's belief, thoughts and opinions are all based on these norms which determine the positive thoughts and behaviour of individuals and society itself, and to grasp insights of life to achieve personal development. On the contrary, one who deviates from these social norms undergoes sufferings and faces challenges in life as well as becomes cause of sorrows and hardship to others who depend on him. Consequently, one such person was Arunagirinathar. Arunagirinathar, who was in search of bodily pleasure had deviated from social norms, thus faced inexplainable sufferings and humiliations, and was inflicted with various diseases. Thus, Arunagirinathar emphasized various social norms in his text *Tiruppukal* with humanistic view that others should not experience his plights. Therefore, this paper focuses on such social norms, namely wisdom, friendship, and impermanence.

Date of submission: 2023-10-26
Date of acceptance: 2023-11-16
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: Mr. Ramalingam Iyakanoo
Email: s2152983@siswa.um.edu.my

**Keywords:** Arunagirinathar, Wisdom, Friendship, Impermanence, Conduct of life, Saints

### முன்னுரை

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றார் ஔவை. மானிடப் பிறவி மிக உன்னதமான பிறவியாகும். இத்தகைய மனிதனை மற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுபவை பண்பாட்டுநெறிகளாகும். நெறி என்னும் சொல்லுக்கு இணையாக அறவியல், நன்னெறிக் கோட்பாடுகள், ஒழுக்காறுகள், ஒழுக்கமுறைகள் ஆகியவற்றை இணையாகக் கூறலாம். சமூகவியல் அறிஞர்களின் கருத்தின்படி, பண்பாடு என்பது வாழ்க்கை முறை (Way of life) எனலாம். ஆகவே, ஒரு சமுதாயத்திலுள்ளோர் எந்நெறியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றார்களோ, அதுவே பண்பாட்டுநெறிகளாகும். இப்பண்பாட்டு நெறிகளுள் அறிவு, நட்பு, நிலையாமை போன்றவையும் அடங்கும்.

மனிதன் இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ இத்தகைய பண்பாட்டுநெறிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் உள்ளது. மனிதனின் நம்பிக்கை, எண்ணங்கள், கருத்துகள் அனைத்தும் இப்பண்பாட்டு நெறிகளின் அடிப்படையிலே அமைகின்றன (ஜெயமோகன், 2012). தனி மனித மற்றும்

[1]The author is a research student in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. s2152983@siswa.um.edu.my

சமுதாயத்தின் நேர்மறையான அசைவுகளை இந்நெறிகளே நிர்ணயிக்கின்றன. ஆகவே, ஒரு தனி மனிதனையும் சமுதாயத்தையும் வார்த்தெடுக்கவும், வாழ்க்கையை உணர்ந்து கொள்வதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் வழிகாட்டியாக அமைபவை பண்பாட்டுநெறிகளேயாகும் (மணிமொழி, 2012). பண்பாட்டுநெறிகளின் அடிப்படையில் அமைந்த தனி மனிதர்களின் வாழ்வானது, அவன் சார்ந்த சமுதாயத்தின் அடையாளமாகும். மாறாக, பண்பாட்டுநெறிகளின்று வழுவிய வாழ்வானது தனி மனிதனுக்குத் துன்பத்தையும் சிக்கல்களையும் ஏற்படுத்தவதோடு, அவனைச் சார்ந்தோருக்கும் இத்தகைய இன்னல்களை விளைவிக்கும். ஆகவே, பண்பாட்டுநெறிகளின் அவசியத்தை உணர்ந்த ஞானிகளும் சான்றோர்களும் இலக்கியவாதிகளும் இதனைக் காலங்காலமாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அத்தகையோர்களுள் ஒருவர்தான் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் தனது இளமைக் காலத்தில், உடலின்பத்திற்கே முதலிடம் வழங்கி, பண்பாட்டுநெறிகளைப் பின்தள்ளியதால், பெருந்துன்பத்தையும் அவமானத்தையும் அனுபவித்தோடு, பலவித நோய்களுக்கும் உள்ளானார். ஆகவே, தனக்கு ஏற்பட்ட அவல நிலை, அடுத்த தலைமுறைக்கும் ஏற்படக்கூடாது என்னும் மனிதநேயம் கலந்த நோக்கில், அருணகிரிநாதர் பலவிதப் பண்பாட்டுக்கூறுகளைத் தன்னுடைய முதன் நூலான திருப்புகழில் வலியுறுத்தியுள்ளார்.

## ஆய்வுப் பின்புலம்

பதினைந்தாம் நூற்றாண்டின் முதல் பகுதியில், கி.பி. 1400 முதல் 1450 வரை அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன (அமார், 2015). அவரின் குடும்ப பின்புலம் குறித்த நம்பத்தக்க தகவல்கள் ஏதும் இல்லை. திருப்புகழில் அமைந்துள்ள தகவல்கள் அடிப்படையில், அவர் சமய தத்துவங்கள், ஞானநூல்கள், புராணங்கள், தமிழ் சமசுகிருதமும் அறிந்தவராகத் தென்படுகின்றார். இத்தகைய அறிவு ஞானமிக்க அருணகிரிநாதர், பண்பாட்டு நெறிகளை மறந்தவராக, பொதுமகளிரோடு சிற்றின்பத்தில் மூழ்கி, கைப்பொருள் யாவுமிழந்து, வறுமையுற்று, பிணிவாய்ப்பட்டு, சுற்றித் திரிந்த அவர், தனது மனைவி, குடும்பத்தார் உட்பட உலகத்தார் அருவருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தனது அவல நிலையை அவரே விளக்குகின்றார்.

*"அரியபெண்கள் நட்பைப் புணர்ந்து*

*பிணிஉழன்று சுற்றித் திரிந்து"*

*(திருப்புகழ், 8)*

*"மனையவள் நகைக்க வூரி*

*னனைவரு நகைக்க லோக*

*மகளிரு நகைக்க தாதை*

*தமரோடும் மனமது சலிப்பஞ்"*

*(திருப்புகழ், 392)*

இதனால், தனது வாழ்வின்மீது விரக்தியுற்று, கிடைத்தற்கரிய மனித வாழ்வை வீணாக்கி விட்டதையும் நினைத்து வருந்தி, உயிரைவிட தீர்மானித்து, திருவண்ணாமலை கோபுரத்திலிருந்து குதித்தபோது, முருகப்பெருமான் அவரை காப்பாற்றி, ஒப்பற்ற ஞானியாக மாற்றினார். எனவே, தனக்கு ஞானத்தை அருளிய முருகப்பெருமானைப் பாடுபொருளாகக் கொண்டு ஏறக்குறைய 16,000 பாடல்களை இயற்றினார். இப்பாடல்களின் ஊடே, தன்னுடைய அவலமிக்க உண்மை வாழ்க்கை அனுபவங்களை வெளிப்படையாகக் கூறியதுடன், பல பண்பாட்டுநெறிகளையும் வலியுறுத்தியுள்ளார். இவையாவும் பிற்கால தலைமுறைக்கு வழிகாட்டியாகவும் நினைவுறுத்தலாக அமையும் என நினைத்தாரோ! இதனால்தான்,

*"அய்யா அருணகிரி அப்பா! உன்னைப்போல மெய்யாக ஓர் சொல்*

*விளம்பினார் யார்?"*

என்று தாயமானவரும் கூறிச்சென்றுள்ளார்.

ஆய்வு முறை

அருணகிரிநாதரின் முதன் நூலான

திருப்புகழ் ஆய்வு நூலாக அமைகின்றது. இந்நூலில் அருணகிரிநாதரின் வாழ்க்கை அனுபவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. 2019ஆம் ஆண்டு சரண் புக்ஸ் நிறுவனத்தால் 'அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் மூலமும் உரையும் ' என்னும் தலைப்பில் மூன்று நூல்கள் ஆறு தொகுதிகளுடன் வெளியிடப்பட்டுள்ளன (அருணகிரிநாதர், 2019). இவற்றில் 1320 பாடல்கள் அடங்கியுள்ளன. இப்பாடல்கள் அனைத்திற்கும் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் தெளிவுரை இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வானது விளக்கமுறை திறனாய்வு (Descriptive Analysis Approach) அணுகுமுறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த அணுகுமுறையானது நூல்களைத் திறனாய்வு செய்து, அவற்றில் பொதிந்துள்ள கருத்துகளை எளிதில் வெளிப்படுத்த உறுதுணையாக அமையும்.

## அருணகிரிநாதரின் அரிய செய்திகள்

'அழகாக வாழக் கற்றுக் கொள், முடிந்தால் வாழ்க்கையை அழகுப்படுத்து, இல்லையென்றால் அசிங்கப்படுத்தாமலவது இரு!' என்றார் அகிலன் (கலா, 2007). அருணகிரிநாதரும் தான் தன்னுடைய வாழ்வை அசிங்கப்படுத்திக் கொண்டது போன்று, மற்றவர்களும் அதேபோன்று வாழாது, அழகாக வாழ, பல பண்பாட்டுநெறிகளை நினைவுறுத்தல்களாக விட்டுச்சென்றுள்ளார். அவற்றுள் சிலவற்றை இவ்வாய்வு சுருக்கமாக ஆராய்கின்றது.

## அறிவு

அறிவு என்பது கருத்துகளின் தொகுப்பு என்று கூறப்படுகின்றது. இருப்பினும், அறிவு என்னும் சொல் பரந்த பொருளை உடையது. அவ்வறிவு எல்லா மனிதர்க்கும் அவசியமாகும். திருவள்ளுவரும் அறிவு குறித்து ஒரு விளக்கத்தினைத் தருகின்றார் (2006). அவர்,

*"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*

*உளழிக்கல் ஆகா அரண்". (குறள், 421)*

என்று கூறுகின்றார். அறிவு என்பது கேடு வராமல் காக்கும் கருவியென்றும், பகைவராலும் அழிக்க முடியாத உள்அரண் என்றும் எடுத்துரைக்கின்றர். அருணகிரிநாதர் மேலும் ஒருபடி ஏறி, இக்கருவியையும் கோட்டையையும் மெய்யறிவு, அதாவது ஞானம் என்று கூறுகின்றார்.

*"பொழியவினை யொழியமன மொழிய இருளொழிய என*

*தொழிவிலக லறிவையருள் புரிவாயே". (திருப்புகழ், 1096)*

மோகம் ஒழிய, கர்மவினையெல்லாம் விட்டு நீங்க, மனம் ஒடுங்க, அஞ்ஞானம் இருள் விலக, இதன் விளைவாக யான், எனது எனப்படும் அகங்கார நீங்க, பெருகி எழும் ஞானத்தை (அறிவை) வேண்டுகின்றார் (அருணகிரிநாதர், 2019). அருணகிரிநாதர், இஞ்ஞானத்தை அகலில் விசாலமாக பெருகியெழும் ஒளியுடன் ஒப்பிடுகின்றார். மோகம், கர்மவினை, மனம், அஞ்ஞானம், அகங்காரம் போன்றவை மெய்யறிவை மறைத்து நிற்பதாய் கூறுகின்றார். அத்துடன், இந்த ஞான அறிவானது போலியான இறையன்பு, இல்லற பாசங்களையும் கடந்தது என்றும் கூறுகின்றார்.

*"அப்பா சத்தா லெட்டா அப்பா*

*லைப்போ தந்தைப் புரிவாயே". (திருப்புகழ், 1119)*

தொடர்ந்து. இஞ்ஞானமானது அறிவைப் பெருக்கி, இடர்களைக் களையும் என்றும் கூறுகின்றார்.

*"ஆறிவாக மும் பெருக இடரான துந்தொலைய*

*அருள்ஞான இன்பமது பிரிவாயே;" (திருப்புகழ், 109)*

இத்தகைய அரிய ஞான அறிவை அடைவதற்கான வழியையும் அருணகிரிநாதர் விவரிக்கின்றார்.

*"உய்யஞா னத்து கைவிடா தெப்பொழுது*

*முள்ளவே தத்துறைகொ டுணர்வோதி" (திருப்புகழ், 274)*

ஞானவழியை கைவிடாமல் பின்பற்றி,

ஞான நூல்களை எப்பொழுதும் அறிவு தெளிவுற ஓதுமாறு அறிவுறுத்துகின்றார். அத்துடன்,

*“ஞானங்கொள் பொறிகள் கூடி”*

*“நமசிவாய வரையேற”*

*“ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம”* (திருப்புகழ், 179)

என்றும் கூறுகின்றார், அதாவது, ஞானப்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவியாவற்றையும் ஒருமுகமாகக் கூட்டி, ‘நமசிவாய’ எனும் பஞ்சாட்சார ஐந்தெழுத்தை ஓதினால், உடலாசை, உயிராசை, நானென்னும் ஆசை போன்ற மயக்க உணர்வுகள் அற்றுப்போய், மெஞ் ஞானம் தோன்றும் என்று விளக்குகின்றார்.

## நட்பு

‘நட்பு’ என்னும் சொல்லின் வேர்ச்சொல் ‘நள்’ ஆகும். ‘நள்’ என்றால் செறிதல், நெருங்குதல் என்று பொருள் தரும் (கதிரைவேல் பிள்ளை, *1998*). நட்பு என்பது உறவு, சிநேகம். சுற்றம் என்றும் பொருள் கொள்ளலாம் என்று கதிரைவேல் பிள்ளை கூறுகின்றார். நட்பானது, இனம், மதம், பால், வகுப்பு அனைத்தையும் கடந்தது. இருப்பினும், நட்பில் உண்மையான நட்பும் உண்டு. தீய நட்பும் உண்டு. பொய்ந்நட்பும் உண்டு. அதனால்தான், வள்ளுவரும் நம்மை எச்சரிக்கின்றார்.

*“அருவுக மாசு அற்றார் கேண்மை ஒன்றுஈத்தும்*

*ஒருவுக ஒப்புஇலார் நட்பு”.* (திருக்குறள், *800*)

குற்றமற்ற நல்லரின் நட்பை கொள்க என்றும் தீயோர் நட்பை அவர் வேண்டிய ஒன்றைக் கொடுத்தாவது கைவிடுக என்றும் அறிவுறுத்துகின்றார். அருணகிரியாரும் இவ்வித இருநட்புகளைப் பற்றி கூறுகின்றார். உண்மையான நட்பைப்பற்றி கூறுகையில்,

“பண்புடைய சிந்தை தங்களினு டன்கலந்து பண்புபெற” (திருப்புகழ், *59*)

*“ஞான நெஞ்சினர் பாலி ணங்கி”* (திருப்புகழ், *103*)

*“சிவகலைக ளாக மங்கள மறை யோது மன்பர்“* (திருப்புகழ், *138*)

*“நீயு னடியரொடு கூடும் வகை”* (திருப்புகழ், *121*)

நற்பண்பாளர்கள், ஞானிகள், ஞான நூல்கள் ஓதுவோர், இறையடியாளர்களுடன் நட்புக் கொள்வதால், அவரவர்களின் நற்பண்புகள், அறிவு, ஞானம் நம்மையும் சான்றோனாக்கும் என்கின்றார். அதனால்தான் நாலடியாரும்

*“...உடைய பிலந்தலைப் பட்டது போலாதே, நல்ல*

*குலந்தலைப் பட்ட இடத்து”.* (நாலாடியார், *160*)

என்றார். சிறந்த மேன்மக்களின் சேர்க்கையானது ஒரு பொருட்சுரங்கத்தைப் போன்றது. அது எல்லா நலங்களும் பெருக அடைவதற்குரிய வழியாகும் (பாலசுந்தரம் பிள்ளை, *1968*). தொடர்ந்து, அருணகிரியார் தீய நட்பான பொய்ந்நட்பு, வீணர் நட்புப் பற்றியும் கூறுகின்றார். பொய்ந்நட்புடைய பொதுமகளிரின் பொய்த்தன்மையை அவர் விவரிக்கையில்,

*“சலித்தும்பின் சிரித்துக் கொண்*

*டழைத்துஞ் சண் பசப்பும் பெண்ஞ்..”* (திருப்புகழ், *29*)

என்று சாடுகின்றார். முதலில் சலித்தும் பின்னர் சிரித்துக் கொண்டு அழைத்துச் சென்றும், சார்ந்து பசப்புகின்ற பெண்கள் என்று சாடுகின்றார். அத்துடன், இத்தகைய பெண்களின் நட்பால் தனக்கு ஏற்பட்ட அவலத்தையும் அருணகிரிநாதர் விளக்குகின்றார்.

*“பெருக்கச்சஞ் சலித்துக்கந்*

*தலுற்றுப்புத் தியற்றுப்பின்*

*பிழைப்பற்றுங் குறைப்ற்றும் பொதுமாதர்”*

(திருப்புகழ், *34*)

*அப்பொதுமகளிரின் உறவால், தான்*

ஒழுக்கக்கேடு உற்று, நற்புத்தியற்று, பிழைப்பு இழந்து, (உடல்) நலம் பாதிப்படைந்து, பல துன்பங்களை அனுபவித்தாகப் புலம்புகின்றார். தொடர்ந்து, வீணர்களுடன் உறவுக் கொள்ளக்கூடாது என்றும் நினைவுறுத்துகின்றார். அருணகிரிநாதர் யாரை வீணர் என்று அழைக்கின்றார்?

*"மாகவி பாடினாலுரக் கஞ்செ யாதுரை சீறுவார்"*

*"சேய் பாவகையைக் கொண்டு போயறி யாம*

*லேகமிற் சிந்து வார்சிலர்:"* (திருப்புகழ், 123)

*"சகல சமய தாக்கிகர் கலக மொழிய.."*(திருப்புகழ்,1058)

மற்றவர்களின் புலமையை ஏற்றுக்கொள்ளாதவர்கள், பாமலை வகைகளின் சிறப்பை உணராது அதனைப் படைப்பவர்கள், மத தருக்கவாதிகள் ஆகியோரை வீணர் எனறு குறிப்பிடுகின்றார். ஆகவே, அருணகிரியார் நட்பைக் கவனமுடன் தேர்தெடுக்க வேண்டும் என்று நினைவுறுத்துகின்றார்.

### நிலையாமை

நிலையாமை என்பது தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டுநெறிகளுள் ஒன்றாகும். 'நிலையாமை' என்னும் சொல் நிரந்தரம் அற்றது, உறுதியின்மை இலாது, அழிந்துபடும் தன்மையைக் கொண்டது என்று உணர்த்துகின்றது (கதிரைவேல் பிள்ளை, 1998). திருமூலர் (2010), யாக்கை, செல்வம், இளமை, உயிர் ஆகியவை நிலையற்றவை என்று எச்சரிக்கின்றார். நாலடியார் (பால்சுந்தரம் பிள்ளை, 1968), செல்வம், இளமை, யாக்கை ஆகியவற்றைச் சுட்டுகின்றது. திருவள்ளுவர் (2006), செல்வம், வாழ்வு, உயிர், உடல் ஆகியவை நிரந்தரமற்றவை என்று கூறுகின்றார். அருணகிரிநாதரே இப்பட்டியலை மேலும் விரிவுப்படுத்தியுள்ளார்.

*"மனைகனக மைந்தர் தமதழகு பெண்டிர்*

*வலிமைகுல நின்ற நிலையூர்பேர்*

*வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்*

*வரிசைதம் ரென்று வருமாயை"* திருப்புகழ், 87)

வீடு, பொன், பிள்ளைகள், மனைவி, தன்னுடைய வலிமை, குலம், இருப்புநிலை, ஊர், புகழ், வளர்ச்சிநிலை, இளமை, பற்றுக்கோடு, துணிவு, பழஞ்செல்வம், மேம்பாடு, சுற்றத்தார் அனைத்தும் மாயை (நிலையாமை) என்கின்றார். அத்துடன், உடலும் உயிரும் அழிந்துபடும் என்றும் கூகின்றார். இருப்பினும், அருணகிரியாரின் நிலையாமைக் குறித்த சிந்தனையானது, உடல், உயிர், இளமை, செல்வம் என்னும் நோக்கில் அணுகப்படுகின்றது.

யாக்கை, உயிர் நிலையாமை

உடலும் உயிரும் ஒன்று மற்றொன்றைச் சார்ந்தது. ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்கயிலாது. இருப்பினும் இரண்டுமே நிலையற்றவை. அருணகிரிநாதர் யாக்கையின் (உடலின்) நிலையாமையை விவரிக்கையில்,

*"மண்டோ யந் தீமென்கால் விண்டோய்*

*வண்கா யம் பொய்க்குடில்"* (திருப்புகழ், 42)

என்று கூறுகின்றார். உடலானது மண், நீர், தீ, காற்று, விண் ஆகிய பஞ்ச பூதங்களாலான பொய்யான குடில் என்கிறார். இந்த உடலானது மின்னல் நிலைத்து நிற்கும் நேரங்கூட நிலைத்து நிற்காத மாயை என்று கூறுகின்றார்.

*"....மின்னதுதானும் அல்லதாகிய உடல் மாயை"* (திருப்புகழ், 417)

இறுதியாக, இன்பமாய், மிக்க பெருமையுடன் வாழ்கின்ற இந்தப் பெரிய உடலானது இறுதியில் ஒரு பிடி சாம்பலாகி அழியும் என்று எச்சரிக்கின்றார். இதனை அவர்,

*"இனிதிறு மாந்தஞ்.நீண்ட காய மொருபிடி சாம்பலாகி"*

(திருப்புகழ், 778)

என்னும் தொடர்வழி நினைவுறுத்து

கின்றார். உடலைக் காப்பது உயிர். இதனையே திருமூலர்,

*"மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள*

*அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்*

*அத்துள்ளே வாழும் அரசன் புறப்பட்டால்*

*மத்தளி மண்ணாய் மயங்கி வாறே." (திருமந்திரம், 189)*

என்றார். உயிராகிய சீவன் புறப்பட்டுச் சென்றால், கோயிலாகிய உடம்பு மண்ணாகிவிடும் என்கிறார். இதனையே அருணகிரிநாதர் கூறுகையில்,

*"மிக்க வுயிர் நழுவியபோதுஞ்..தழல் தாங்கொ*

*ளுத்தியிட வொரு பிடிசாம்பல் பட்ட" (திருப்புகழ், 816)*

என்றுரைத்தார். ஆகவே, அரிய உயிரானது நிலையற்றது. அவ்வுயிர் பிரிந்துபோனால், அதைத் தாங்கிய உடல் பயனற்றதாகிவிடும் என்று நினைவுறுத்துகின்றார்.

இளமை நிலையாமை

அழகான முகம், கட்டான உடல், வலிமையான தோள், நேரான முதுகு, துடிப்பான நடை யாவும் இளமையின் அடையாளங்கள். ஆனால், இவையாவும் நிரந்தரம் அற்றவை என்பது நாம் அறிந்த உண்மை. இளமையின் நிலையற்ற தன்மையை அருண்கிரிநாதரும் விவரிக்கின்றார்.

*"குழவியு மாய்ஞ்குமரனு மாய்..*

*குனிகொடு கூடு மாகிடு கிழவனு மாய்" (திருப்புகழ், 417)*

(ஒருவன்) குழந்தையாகப் பிறந்து, இளைஞ் னாக வளர்ந்து, பின்பு உடல் வளைந்து கூன் பெரிதாயான கிழவனுமாக ஆகின்றான். இம்முதுமையில், உடல் சுருக்கங்கள் பெருகி, இளமையும் உயிரும் விடைபெறுகின்றன என்பதை அருணகிரிநாதர்,

*"மெய்த்திரை வந்து கலந்தயி ரோட" (திருப்புகழ்)*

என்று விளக்குகின்றார்.

செல்வம் நிலையாமை

வளமான வாழ்விற்கு செல்வம் மிகவும் அவசியமானது என்பது அனைவருக்கும் ஏற்புடையக் கருத்து. இருப்பினும், அனைத்தும் உணர்ந்த வள்ளுவரும் செல்வத்தின்

நிலையாமையை வழியுறுத்துகின்றார்.

*கூத்துஆட்டு அவைக்குழாத்து அன்றே பெருஞ்செல்வம்*

*போக்கும் அதுவிளிந் துஅற்று." (குறள்,332)*

பெருஞ்செல்வம் என்பது கூத்தாடுமிடத்தில் வந்து சேரும் கூட்டத்தைப் போன்றது. கூத்து முடிந்ததும் கலையும் கூட்டத்தைப் போன்றது செல்வம் என்று கூறுகின்றார். வீடு, பொன், பழஞ்செல்வம் போன்றவற்றை நிலையாமை என்று கூறிய அருணகிரியார், இந்நிலையாதச் செல்வத்தை ஈட்டுவதிலேயே ஒருவன் வாழ்நாளை வீணாக்கி, பிணியுற்று, அப்பொருளை அனுபவிக்காமலேயே மாண்டுப் போவதாகக் கூறுகின்றார்.

*"நிலையாப் பொருளை யுடலாக் கருதி*

*நெடுநாட் பொழுது மவமேபோய்*

*நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்*

*நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி..மடிவேற்"*

*(திருப்புகழ், 78)*

அத்தகையோர், நிலையில்லாதப் பொருளைப் பொன்னாக நினைத்து, அதன் பொருட்டு நெடுநாள் பொழுதெல்லாம் வீணாகச் செலவழித்து, மனத்திண்மை போய், செவிடாகி, பிணி நிறைந்து, ஐம்பொறிகளும் தடிமாற்றம் உற்று, இறந்துபடுவார்.

இங்கு, நிலையாமை குறித்த அருணகிரியார் கருத்துகள் யாவும் துறவுநிலையில் கூறப்பட்டக் கருத்துகள் எனபதை மறுக்கவியலாது. இருப்பினும், இப்பண்பாட்டுநெறியைப் புறந்தள்ளியதன் விளாவாக, தனக்கேற்பட்ட அவலங்களை முன் வைத்து, மனிதர்கள் இவற்றையுணர்ந்து, மிதமான வாழ்வு வாழவேண்டு என்பதே அவரின் நோக்கம் எனலாம்.

### முடிவுரை

இங்கு முன்வைக்கப்பட்ட அனைத்து பண்புநெறிகளும் அறிவுரைகள் அன்று. மாறாக, இந்நெறிகளிருந்து நழுவி, 'வாழ்ந்து கெட்டவன்' ஒருவனின் அனுபவம் சார்ந்த நினைவுத்தல்களாகும். ஆகவே, இப்பண்புநெறிகளைப் போற்றி, மிதமான வாழ்க்கை வாழ்வதே அறிவுடைமையாகும்.

## References


Amār, E. (2015). *Aruṇakirinātar Paṭaippukaḷil Ōr Āyvu*. Ceṉṉai, Intiyā: Matarācu Palkalaikkaḻakam. . *[அமார், எ. (2015). அருணகிரிநாதர் படைப்புகளில் ஓர் ஆய்வு. சென்னை, இந்தியா: மதராசு பல்கலைக்கழகம்.]*

Aruṇakirinātar. (2019). *Aruṇakirinātar Aruḷiya Tiruppukaḻ Mūlamum Uraiyum (3 Nūlkaḷ)*. Ceṉṉai, Intiyā: Caraṇ Puks. *[அருணகிரிநாதர். (2019). அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் மூலமும் உரையும் (3 நூல்கள்). சென்னை, இந்தியா: சரண் புக்ஸ்.]*

Jeyamōkaṉ, Pa. (2012, Navampar 6). *Kalaiccoṟkaḷ*. Retrieved From Jeyamōkaṉ: Jeyamohan.In. "*ஜயமோகன், ப.* (2012, *நவம்பர் 6). கலைச்சொற்கள்*. Retrieved from *ஜயமோகன்*: jeyamohan.in.

Kalā, Ra. (2007). Tamiḻ Ilakkiyaṅkaḷ Kāṭṭum Vāḻviyal Kūṟukaḷ. In Ta. Paṭṭāpirāmaṉ, *Vāḻviyal Mēṉmai* (Pp. 64-68). Ceṉṉai, Intiyā: Kalaiñaṉ Patippakam. *தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் கூறுகள்.* In *த. பட்டாபிராமன், வாழ்வியல் மேன்மை* (pp. *6468). சென்னை, இந்தியா: கலைஞன் பதிப்பகம்.]*

Katiraivēl Piḷḷai, Na. (1998). *Tamiḻc Collakarāti*. Ceṉṉai, Intiyā: Katiraivēl Piḷḷai. *[கதிரைவேல் பிள்ளை, ந. (1998). தமிழ்ச் சொல்லகராதி. சென்னை, இந்தியா: கதிரைவேல் பிள்ளை.]*

Maṇimoḻi, Ta. (2012). *Caṅka Ilakkiyattil Paṇpāṭṭu Viḻumiyaṅkaḷ*. In Ca. Cōmacuntaram, Tamiḻilakkiyaṅkaḷ Pulappaṭuttum Viḻumiyaṅḷ (Pp. 167-171). Tiruccirāppaḷḷi, Intiyā: Piṣap'hapar Kallūri. *[மணிமொழி, த. (2012). சங்க இலக்கியத்தில் பண்பாட்டு விழுமியங்கள்.* In *ச. சோமசுந்தரம், தமிழிலக்கியங்கள் புலப்படுத்தும் விழுமியங்ள்* (pp. *167171). திருச்சிராப்பள்ளி, இந்தியா: பிஷப்ஹபர் கல்லூரி.]*

Pālcuntaram Piḷḷai, Ta. (1968). *Nālaṭiyār Urai*. Tirunelvēli, Intiyā: Tirunelvēlit Teṉṉintiya Caivacitatānta Nūṟpatippuk Kaḻakam. *[பால்சுந்தரம் பிள்ளை, த. (1968). நாலடியார் உரை. திருநெல்வேலி, இந்தியா: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிததாந்த நூற்பதிப்புக் கழகம்.]*

Tirumūlar. (2010). *Tirumantiram*. Ceṉṉai, Intiyā: Paḻaṉiyappā Piratars. . *[திருமூலர். (2010). திருமந்திரம். சென்னை, இந்தியா: பழனியப்பா பிரதர்ஸ்.]*

Tiruvaḷḷuvar. (2006). *Tirukkuṟaḷ*. Ceṉṉai, Intiyā: Narmatā Patippakam. *[திருவள்ளுவர். (2006). திருக்குறள். சென்னை, இந்தியா: நர்மதா பதிப்பகம்.]*